(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 197.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 யூலை 04, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0595/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) 1995 — 2000 காலப்பகுதியில் வருடாந்த அடிப்படையிலான,

(i) நாட்டின் மொத்த வேலைப்படை என்ன என்பதையும்,

(ii) தனியார் துறை மற்றும் அரசதுறை வேலைப்படை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iii) அரச துறையில் முப்படைகள், பொலிஸ்துணைச் சேவை ஆகியவற்றின் மொத்தத் தொழில்படை மற்றும் ஏனைய அரச சேவையினரின் மொத்த எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(iv) பொதுத் துறையின் கீழ் வரும் மேலே குறிப்பிடப்பட்ட அனைவரும் ஓய்வூதியத்துக்குரித்துடையவர்களா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 15 ஆண்டுகளில், அரசதுறையில் ஏதேனும் உறுதிப்படுத்தப்படாத, தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவர்களின் பெயர்கள், நியமனங்கள் என்ன வென்பதையும்,

(iii) அந்நியமனங்கள் அரசாங்கத்தின் சம்பளச் செலவினத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை வருட வாரியாகவும்,

(iv) அவை எப்போது உறுதி செய்யப்படும் என்பதையும்,

(v) அவை எதிர்காலத்தில் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், இந் நோக்கத்திற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் எப்போது மேற்கொண்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1082/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் கிண்ணியா ரீ.பீ.ஜாயா மகளிர் வித்தியாலயம் சுனாமியால் அழிவடைந்ததென்பதையும்;

(ii) இப்பாடசாலையைப் புனரமைக்க இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் மாணவிகள் தீவிர வசதியீனங்களுக்கு இலக்காகியுள்ளனரென்பதையும்;

(iii) இவ்வாறான நிலைமையின் கீழும் இவ்வித்தியாலயம் க.பொ.த.(சா/த) பரீட்சை மற்றும் (உ/த) பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இப்பாடசாலையில் நிலவுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து கல்வியில் நவோதயத்தை ஏற்படுத்துவதற்காக புதிய கட்டிடங்களை நிர்மாணித்து பாடசாலையைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதைக் குறிப்பிடுவாரா?

(இ) (i) கிண்ணியா ரீ.பீ. ஜாயா மகளிர் வித்தியாலயத்தை வேறோர் இடத்திற்கு கொண்டு செல்வதற்கான தயார் நிலை நிலவுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், பாடசாலையைக் கொண்டு செல்லும் புதிய இடம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இப்பாடசாலையை வேறோர் இடத்திற்கு கொண்டு செல்வதனால் அங்குள்ள பெரும்பாலான மாணவியருக்கு போக்குவரத்துச் சிரமங்கள் தோன்றுமென்பதையும்;

(ii) அதன் விளைவாக இவர்களின் கல்வி நடவடிக்கைகள் நலிவடையுமென்பதையும்

அவர் ஏற்றுக் கொள்கிறாரா?

(உ) இன்றேல், ஏன்?

1541/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை மகநெகும இயந்திர உபகரணங்கள் மற்றும் நிர்மாணக் கம்பனி மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி வீதிகளினதும் பாலங்களினதும் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு வீதி மற்றும் பாலத்துக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகள் மற்றும் பாலங்களில் மகநெகும நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் வேறு கம்பனிகளினால் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்கள் உள்ளனவா;

(ii) மேற்படி நிர்மாணங்களை மேற்கொண்ட வேறு நிறுவனங்களின் விபரங்கள் யாவை;

(iii) இவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1621/ ’11

4\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(4)

(அ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் தற்போதைய உயர்மட்ட உத்தியோகத்தர் சபையிலும் பணிப்பாளர் சபையிலும் பணியாற்றுபவர்கள் யாவர்;

(ii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும், பணிப்பாளர் சபை உறுப்பினரதும் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் சம்பள அளவுகள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டுக்கான ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 5.6 பில்லியன் சொத்துக்கள் நிலுவை காணப்படுகின்றதா;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2028/ ’11

5\.

கௌரவ சஜித் பிரேமதாச,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கின்ற சிறந்த ஆக்கக் கலைஞர்களின் புத்தாக்கங்கள், புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற இயந்திர சாதனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பலம்வாய்ந்ததொரு பொருளாதார மட்டத்தைக் கொண்டிராத இந்நாட்டில், புத்தாக்க உற்பத்தியாளர்கள் அநேகமானோருக்கு தமது உற்பத்திகளை மேம்படுத்தி முன்னெடுத்துச் செல்வதற்கான இயலுமை இல்லை என்பதையும்;

(ii) சமூகத்தில் வசதிவாய்ப்புள்ளவர்கள், இவ்வாறானவர்களுக்கு நிதிசார் உதவிகளை வழங்கத் தயங்குகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) புத்தாக்க உற்பத்தியாளர்களின் உற்பத்திகளின் ஊடாக இந்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்துக்கு கிடைக்கின்ற பயன்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கும்;

(ii) அதற்கமைய பயனுள்ள புத்தாக்கங்களை உற்பத்தி செய்த உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்கி அப்பொருட்களின் உற்பத்தியை கைத்தொழிலொன்றாக மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2100/ '11

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்காக துறைமுகத்திற்குச் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணத் தொகை மற்றும் செலுத்தப்பட்ட தரப்பு யாதென்பதையும்;

(ii) 2006, 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மேற்படி இறக்குமதிகளுடன் தொடர்புடையதாக அரச மருந்தகக் கூட்டுத்தானம் செலுத்தியுள்ள தாமதக் கட்டணங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட பழுதடைந்த , காலாவதியான மற்றும் தரத்தில் குறைந்த மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தரத்தில் குறைந்த மருந்து வழங்குநர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை அறவிடப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2008 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் தரத்தில் குறைந்தவையென வெளிப்படுத்தப்பட்ட போதிலும் கேள்விப்பத்திரச் சபையானது மீளக் கொள்வனவு செய்கின்றபோது இதனைக் கவனத்திற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சபியுரொக்ஷிம் சோடியம் (Cefuroxime Sodium) 750 மில்லிகிராம் 250,000 அலகு தடுப்பூசி மருந்துகள், 2009 ஆம் ஆண்டு ஆய்வுகூட பரிசோதனையின்றி கொள்வனவு செய்யப்பட்ட கட்டுத்துணி மற்றும் உரிய நிறையின்றி அமொக்சிலின் நுண்ணுயிர்கொல்லி வில்லைகள் 250 மில்லிகிராம் 6783 அலகுகள் ஆகியவற்றை மருந்தகக் கூட்டுத்தானம் கொள்வனவு செய்த வேளையில் ஏற்பட்ட நட்டம் யாதென்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2247/ '12

7.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஏப்பிரல் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் பதவிக் காலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முழுப்பெயர் மற்றும் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்காக வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட ஐந்து மாடிக் கட்டிடத்தொகுதியின் அமைவிடம் மற்றும் அதற்காக மாதாந்தம் செலுத்தப்பட்ட வாடகை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பளங்கள், நீர் கட்டணம், மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட மீண்டெழும் செலவினங்களுக்காக முதல் ஆறு மாதங்களில் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் கீழிருந்த 120 வரி மேன்முறையீட்டுக் கோப்புகள் புதிதாக அமைக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோப்புகள் சம்பந்தமாக எவ்வித விசாரணைகளும் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவுசெய்யப்படவில்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக அரசாங்கத்திற்கு அண்ணளவாக ரூபா 800 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது எள்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1755/ '11

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட அங்கவீனமுற்ற யுத்த வீரர்களது எண்ணிக்கையைத் தனித்தனியாகவும்;

(ii) சகலவிதமான படிகள் உள்ளடங்கலாக அங்கவீனமுற்ற நபரொருவருக்கு மாதாந்தம் வழங்கப்படும் தொகையையும்;

(iii) மேற்படி கொடுப்பனவில் அவருக்கான ஓய்வூதியமும் உள்ளடங்குகிறதா என்பதையும்;

(iv) 2006, 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அங்கவீனமுற்ற பாதுகாப்புப் படை ஆளணியினருக்கென வழங்கப்பட்ட கொடுப்பனவுகளுக்காக ஏற்பட்ட மொத்த செலவையும்;

(v) அரசாங்கத்தினால் அவ்வீரர்களுக்கு வழங்கப்பட்ட ஏனைய நன்மைகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1821/ ’11

9.

கௌரவ புத்திக்க பத்திரண,— துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ மற்றும் கண்டி நகரத்தை இணைக்கும் ஹல்ஒலுவ, தொடம்வல சங்கிலிப் பாலத்துக்குப் பதிலாக நிரந்தர பாலமொன்றை அமைப்பதற்கு பல தடவைகள் அடிக்கல் வைக்கப்பட்ட போதிலும் இதுவரை இப்பாலம் அமைக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மக்களின் போக்குவரத்து வசதிக்காக குறிப்பிட்ட இடத்தில் புதிய பாலமொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) இதுவரை இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iv) இப்பாலத்தை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2034/ ’11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களா, அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்களா இன்றேல், இராணுவ உத்தியோகத்தர்களா என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக வேறு ஆட்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், அவர்கள் யாவர் என்பதையும்;

(v) பாதுகாப்புக்காக அத்தகைய ஆட்களை ஈடுபடுத்தியுள்ள அமைச்சர்கள் யாவர் என்பதையும்;

(vi) பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக அத்தகைய பிரிவினரை ஈடுபடுத்தியமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஆ(i) இல் குறிப்பிடப்பட்ட அமைச்சரொருவருக்கு வழங்கப்பட்டுள்ள பின்வரிசை அணி (backup vehicles) வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2210 / ‘12

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு,பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை, இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைகளில் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்தின்படி, குறை வருமானம் பெறுவோருக்கான நகர குடியேற்றக் கருத்திட்டத்தின் கீழ் வீடமைப்பதற்காக வழங்கப்பட்ட 2 பர்சஸ் காணித் துண்டுக்கான முழுமையான உரிமையை அக்காணிகளில் தற்போது வசிப்பவர்களுக்கு வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தற்போது 2 பர்சஸ் காணிக்கான முழுமையான உரிமை கிடைக்கப்பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1756/ ’11

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இராணுவம் சாராத செயற்பாடுகளுக்கென பணிக்கமர்த்தப்பட்ட முப்படைகளைச் சேர்ந்த படை வீரர்களது எண்ணிக்கையையும்;

(ii) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற இராணுவம் சாராத வேலைகளின் தன்மையையும்;

(iii) இராணுவம் சாராத வேலைகளை செய்வதற்காக அவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

(iv) ஆம் எனில், மேற்படி (iii) இன் பிரகாரம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) தனக்கு வழங்கப்பட்ட இராணுவம் சாராத வேலைகளை செய்ய முடியாமையின் காரணமாக ஆயுதப் படையிலிருந்து யாராவது பதவியிலிருந்து விலகியுள்ளனரா என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1822/ ’11

13.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பெருந்தொகையான மக்கள் சேவையைப் பெற்றுக்கொள்ளும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முல்கிரிகல வலஸ்முல்ல யஹல்முல்ல குடும்ப சுகாதார சேவை நிலையக் கட்டிடம் தற்பொழுது இடிந்து விழும் ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறாயின், இக்கட்டிடத்தை துரிதமாக மறுசீரமைக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) இதுவரை இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா;

(iii) அப் பணத் தொகை எவ்வளவு;

(iv) மேற்படி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2068/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பங்குச் சந்தையில் முதலீடு செய்துள்ள அரச நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் முதலீடு செய்த சந்தர்ப்பத்தில் பங்கொன்றின் பெறுமதி யாதென்பதையும்;

(iv) இப்பொழுது மேற்படி ஒவ்வொரு பங்கினதும் பெறுமதி யாதென்பதையும்;

(v) பங்குகளில் முதலீடு செய்ததன் மூலம் மேற்படி நிறுவனங்கள் அடைந்த இலாபம் அல்லது நட்டம் யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2211/ '12

15.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை இலங்கையை வெற்றிபெறச் செய்வோம் கொள்கைத் திட்டத்தின் ஜனசெவன நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப தியவர, தியவர விசிரி, ஜன உதான, கம்உதான போன்ற பல்வேறு பெயர்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புக் கடன்களையும் வட்டியையும் பதிவழிப்புச் செய்து மேற்படி வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுக்கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு வீடமைப்புத் திட்டத்தின் கீழும் வீடுகளின் அறுதி உரிமையை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3இ ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2012 பெப்புருவரி மாதம் 27 ஆம் திகதிய 1747/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2012 ஏப்பிரல் மாதம் 04 ஆம் திகதிய 1752/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு 2012 மே மாதம் 09 ஆம் திகதிய 1757/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

4.

கலாநிதி மாலினி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

5.

பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* 6.

புத்த சிராவக பிக்குப் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2012 மே மாதம் 09 ஆம் திகதிய 1757/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பிரிவின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் அதன் அங்கத்தவர்களினதும் எரிபொருள் கொடுப்பனவுகள் 2012.05.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது —

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கு மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 225 லீற்றரையும் அதன் அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 170 லீற்றரையும் வழங்க அல்லது அதற்குச் சமமான சந்தை விலைகளுக்கேற்ப கொடுப்பனவொன்றைச் செலுத்த வேண்டுமென்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் கொடுப்பனவுகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகளுக்குப் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் பதிலீடு செய்யப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 13.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 16.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

17.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.